//தனி கவனம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண் 4255 /ஆ4/2024 நாள் 01.09.2025**

| | | |
|---|---|---|
| பொருள் | : | தேர்வுகள்– தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு அக்டோபர் 2025 –11.10.2025 அன்று நடைபெறவுள்ள தேர்விற்கு –பள்ளி மாணவர்கள் விவரங்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தல் –தொடர்பாக |
| பார்வை | : | 1.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.011666/ டி(3)/2024 நாள் 13.09.2024<br>2. இவ்வலுவலகம் இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 22.08.2025 |

===============

பார்வை–1 ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் செயல்முறைகளின் படி தமிழ் மொழி இலக்கியத் திறனறிவுத் தேர்வு அக்டோபர் 2025 11.10.2025 அன்று நடைபெறவுள்ள தேர்விற்கு விண்ணப்பிக்கும் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வது தொடர்பான அறிவுரைகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மெட்ரிக்/ CBSE/ICSE உட்பட) மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| தமிழ்நாடு மொழி இலக்கியத் திறனறித் தேர்வு அக்டோபர் –2025 | |
|---|---|
| மாணவர்கள் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்யும் தேதி | 22.08.2025 TO 04.09.2025 |
| மாணவர்கள் விண்ணப்பங்களை பள்ளித்தலைமை ஆசிரியரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 04.09.2025 |
| தேர்வுக்கட்டணம் | ரூ.50/– |
| தேர்வு நாள் | 11.10.2025 (சனிக்கிழமை) |
| பள்ளித்தலைமை ஆசிரியர் விண்ணப்பங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் | 28.08.2025 முதல் 10.09.2025 |
| தேர்வுக் கட்டணம் ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டிய கடைசி நாள் | 10.09.2025 |
| Summary Report மற்றும் Fees Receipt அரசு தேர்வுகள் உதவி இயக்ககத்தில் சமர்பிக்க வேண்டிய நாள் | 11.09.2025 –க்குள் |

இணைப்பு :

- TTSE-INSTRUCTION FOR FILLING ONLINE APPLICATION
- பதிவேற்றம் செய்வதற்கான அறிவுரைகள்

//ஓம்.சு.தயாளன் //
முதன்மைக்கல்விஅலுவலர்,(பொ)
வேலூர்.

பெறுநர்:
அனைத்து வகை (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மெட்ரிக்/ CBSE/ICSE உட்பட)மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்:

- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.

பதிவேற்றம் செய்தல் தொடர்பான விவரங்கள்;-

மேற்குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பிக்க 11- ஆம் வகுப்பு பள்ளி மாணவர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக 28.08.2025 பிற்பகல் முதல் 10.09.2025 வரை பதிவேற்றம் செய்யலாம் என்ற விவரத்தினைத் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி, மெட்ரிக் பள்ளி, ஆங்கிலோ-இந்தியன், மற்றும் மெட்ரிக்/CBSE/ICSE பள்ளித் தலைமையாசிரியர்கள் /முதர்வர்களுக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பதிவேற்றம் செய்வதற்கான அறிவுரைகள்

1. பள்ளிகளுக்கான UDISE CODE- ஐ பயன்படுத்தி விண்ணப்பித்த மாணவர்களின் EMIS எண்ணினைப் பதிவு செய்தவுடன் பெரும்பாலான விவரங்கள் உடனடியாக திரையில் தோன்றும். அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், திருத்தங்களை மேற்கொள்ளவும், விடுபட்டுள்ள விவரங்களையும், புகைப்படத்தையும் பதிவேற்றம் செய்தால் போதுமானதாகும். மெட்ரிக் /ICSE / CBSE/KV மாணவர்களுக்கும் இந்நடைமுறை பொருந்தும். இவ்வாண்டு புதியதாக விண்ணப்பிக்கும் பள்ளிகள் இணைப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி பதிவு (Register) செய்த பின் USER ID, PASSWORD ஐ பயன்படுத்தி மாணவர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.
2. தேர்வர்கள் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்துள்ள விவரங்கள் சரியானதா என்பதனைப் பள்ளி ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்த பின்னரே பதிவேற்றம் செய்ய வேண்டும்.
3. பள்ளி முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர், முகவரியினை அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் (Pin Code) பதிவு செய்யப்படவேண்டும்.
4. வீட்டு முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர் மற்றும் முகவரியினை பதியக்கூடாது. தேர்வரின் வீட்டு முகவரி மட்டுமே பதியப்படவேண்டும்.
5. பெற்றோரின் தொலைபேசி/அலைபேசி என்ற கலத்திலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி/அலைபேசி எண்ணையே பதிய வேண்டும்.
6. பதிவேற்றம் செய்த விவரங்களை ஒப்புகைச் சீட்டை கொண்டு தேர்வரின் விவரங்கள் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று உறுதி செய்துகொள்ளவும்.
7. மேற்படி தேர்விற்கான தேர்வுக் கட்டணம் ரூ.50/- வீதம் Online -இல் செலுத்த வேண்டும். தேர்வு கட்டணம் செலுத்த இறுதி நாளான 10.09.2025 மாலை 05.00 மணிக்குள் Online -இல் தேர்வுக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

8. பதிவேற்றம் செய்த விவரங்களில் மாற்றம் ஏதேனும் செய்ய வேண்டியிருப்பின் தேர்வுக் கட்டணத் தொகை செலுத்துவதற்கு முன்னதாகவே சரி செய்து கொள்ள வேண்டும். தேர்வு கட்டணம் செலுத்திய பின்னர் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பதிவுகளில் எவ்வித திருத்தங்களும் செய்ய இயலாது.
9. பதிவேற்றம் முடிந்தவுடன் தேர்வர்களின் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் (Summary Report) மற்றும் தேர்வுக்கட்டண செலுத்துச் சீட்டு (ஒரு தேர்வருக்கு ரூ.50/- வீதம்) வேலூர் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலர்களிடம் 11.09.2025-க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஓம்.சு.தயாளன் //
முதன்மைக்கல்விஅலுவலர்,(பொ)
வேலூர்.